இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 180 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 27 – செவ்வாய்க்கிழமை 10 பிப்ரவரி 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 180 : Thiruvalluvar Year - 2057 - Thai 27 - Tuesday 10 February 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## ‘திராவிட மாடல்’ அரசு

# ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசு!

### ‘ஜாக்டோ - ஜியோ’ சார்பில் நடைபெற்ற – நன்றி அறிவிப்பு மாநாட்டில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.10–**

**‘ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்று ஜாக்டோ-ஜியோ அமைப்பு சார்பில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு மாநாட்டில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.2.2026) சென்னையில், ஜாக்டோ - ஜியோ அமைப்பு சார்பில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு :-

ஜாக்டோ - ஜியோ அமைப்பின் சார்பில் நடைபெறும் நன்றி தெரிவிக்கும் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

முதலில் உங்களிடம் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நன்றி சொல்லி, நமக்கான உறவைத் தூரமாக்கிவிடாதீர்கள்! உங்கள் வியர்வைத் துளிகள் மதிக்கப்பட வேண்டும். கண்ணீர்த் துளிகள் துடைக்கப்பட வேண்டும் என்றுதான், உங்களின் கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்! மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சிப் பொறுப்பிற்கு வரும் நாங்களும், அரசு ஊழியர்களாக மக்களுக்காகப் பணியாற்றும் நீங்களும் சேர்ந்துதான், அரசாங்கம்! ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக இருக்கும், அமைச்சரவையையும், அரசு ஊழியர்களையும் ஒருசேரப் பார்ப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

### கலைஞர் வகுத்துத் தந்த பாதை!

இந்த மகிழ்ச்சி, எனக்குள் மட்டுமல்ல; உங்களுக்குள்ளேயும் இருப்பதை, உங்கள் முகங்களைப் பார்க்கும்போதே தெளிவாகத் தெரிகிறது! நம்முடைய திராவிட மாடல் அரசு, அரசு ஊழியர்களின் அரசாக இருப்பதுதான், இந்த மகிழ்ச்சிக்குக் காரணம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.2.2026) சென்னையில், ஜாக்டோ–ஜியோ அமைப்பு சார்பில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா. சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஜாக்டோ – ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் – மு. பாஸ்கரன், கு. தியாகராஜன், இரா. தாஸ், அ. வின்செண்ட் பால்ராஜ், செ. முத்துசாமி, கு.வெங்கடேசன், ஆ.ஆறுமுகம், மு.பொன்னிவளவன், ச.மயில், வெ.சோமசுந்தரம், சா.ஞானசேகரன், சோ.சுரேஷ், நா.சண்முகநாதன், இலா.தியோடர் ராபின்சன், கி.மகேந்திரன், ஜெ.காந்திராஜ், சி.சேகர், சு. சங்கரலிங்கம், சே. பிரபாகரன், பொ.அன்பரசன், சி.அரசு, திருமதி அ.மலர்விழி, இரா.இளங்கோவன், இரா.சத்தியமூர்த்தி, கோ.பாக்கியராஜ், சீ.காந்திமதி நாதன், ச.நேரு, எஸ்.சங்கரபெருமாள், வே. விஜயகுமரன், அ.சங்கர் மற்றும் உயர்மட்டக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இது, தமிழினத் தலைவர் கலைஞர் வகுத்துத் தந்த பாதை! கலைஞர் ஆட்சிக் காலம் என்பது, அரசு ஊழியர்களின் - ஆசிரியர்களின் - அரசுப் பணியாளர்களின் நலன் காக்கும் பொற்காலமாக இருந்தது! “நிலம் நனைக்கும் வான் போல” அரசு ஊழியர்களுக்காக தலைவர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகளையும், சீர்திருத்தங்களையும் சொல்ல வேண்டும் என்றால், இந்த ஒரு மாநாடு போதாது! எனவே, அந்த சாதனைகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் விரிவாக அல்ல. விளக்கமாக அல்ல. தலைப்புச் செய்திகளாக நான் சொல்ல விரும்புகிறேன்.

### கலைஞரின் அறிவிப்புகள்!

- **அரசு அலுவலர்கள் நடத்தை பற்றிய, இரகசியக் குறிப்பேடு நீக்கம்!**
- **இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதி!**
- **பணிக்காலத்தில் இறக்கும் அரசு ஊழியர்களின் வாரிசுக்கு கருணை அடிப்படையில் பணி!**
- **ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்து பணமாகப் பெறும் திட்டம் அமல்!**
- **திருமணக் கடன், வாகனக் கடன், வீடுகட்டக் கடன்!**
- **மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்!**
- **6 மாதத்திற்கு ஒருமுறை ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தும் போதெல்லாம், மாநில அரசு ஊழியர்களுக்கும் உயர்த்தி வழங்கினார்!**
- **பொங்கல் கருணைத் தொகையை போனஸாக வழங்கினார்!**
- **ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு நடத்தி பணி மாறுதல்கள்!**
- **அரசுப் பணியில் சேருவதற்கான வயது வரம்பு உயர்வு!**
- **பத்தாயிரம் சாலைப் பணியாளர்கள் நியமனம்!**
- **ஏழாயிரம் மக்கள்நலப் பணியாளர்கள் நியமனம்!**
- **பண்டிகை முன்பணத்திற்கு வட்டி நீக்கம்!**
- **2 இலட்சம் சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம்!**
- **ஓய்வுக்கால பணிக்கொடை உச்ச வரம்பு உயர்வு!**
- **புலவர் பட்டம் பி.லிட்., பட்டமாகி, தமிழாசிரியர் பணியிட பாகுபாடு நீக்கம்!**
- **அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஒன்றிய அரசுக்கு இணையான சம்பள விகிதங்கள்!**

இப்படி, அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து நன்மையை மட்டுமே செய்த ஆட்சிதான், தலைவர் கலைஞர் தலைமையில் இருந்த ஆட்சி! அரசியலில் கொள்கைப் பிடிப்போடு இயங்கும் நாங்கள், மக்கள் நலனுக்காக உருவாக்கும் திட்டங்களை, வெற்றிகரமாக அவர்களிடம் கொண்டுசென்று சேர்க்கும் பெருங்கடமையைச் செய்பவர்கள், அரசு ஊழியர்களான நீங்கள்தான்!

### பணி அல்ல – தொண்டு!

அதேபோல், ஆசிரியர்கள் செய்வதை பணி என்று சொல்ல மாட்டேன்! நீங்கள் செய்வது தொண்டு! உங்களால்தான், இந்தியாவில் பள்ளிக்கல்வியில் இரண்டாவது சிறந்த மாநிலமாக, நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு விளங்கிக் கொண்டு இருக்கிறது! நீங்கள் பாடுபட்டு உருவாக்கியவர்கள்தான், உலகம் முழுவதும் நல்ல பணிகளிலும்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### மாநிலத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து தாமதங்களுக்கு வழி வகுப்பதால்

# தமிழ்நாட்டு ரயில்வே திட்டங்களுக்கு விரைந்து நிதி ஒதுக்கிடுவீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, பிப். 10 -**

**தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் அனுமதிக்கப்பட்ட இரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் தாமதமின்றி முழுமையாக முன்னுரிமை அடிப்படையில் விடுவித்திடவும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய திட்டங்களை அனுமதித்திடவும் உரிய அறிவுரைகளை இரயில்வே அமைச்சகத்திற்கு வழங்கிட வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் இரயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தெரிவித்து, நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு, குறிப்பாக, நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை முறையாக விடுவித்தல் மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குதல் போன்றவற்றில் பிரதமர் அவர்கள் தலையிட்டு உரிய நேரத்தில் தீர்வு காணவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளதோடு, ஊடகங்களில் இது தொடர்பாக பரவி வரும் உண்மைக்குப் புறம்பான சில செய்தி களுக்காகவும் இக்கடிதத்தினை தான் எழுதுவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நிலம் கையகப்படுத்த நிர்வாக ஒப்பந்தம்!

தமிழ்நாட்டில், ஒன்றிய அரசின் பல்வேறு இரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2500.61.06 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கையகப் படுத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது என்றும், இதில் 931.52.96 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு இரயில்வே துறை நிதியை ஒதுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இரயில்வே துறை யிடமிருந்து சமீபத்தில் திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை (LPS) பெறப்பட்ட இரண்டு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக அனுமதி செயல்பாட்டில் உள்ளது என்றும், அது விரைவில் வழங்கப்படும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

19 முக்கிய இரயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1273.05.15 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில், 1198.02.34 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள், அதாவது 94 விழுக்காடு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இருப்பினும், ஐந்து திட்டங்களுக்கு இரயில்வே துறையால் நிலத் திட்ட அட்டவணை (LPS) இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தனது கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### மதுரை - தூத்துக்குடி அகல ரயில் பாதை!

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான திண்டிவனம் – நகரி அகல இரயில் பாதை, மதுரை – தூத்துக்குடி அகல இரயில் பாதை, மணியாச்சி - நாகர்கோவில் அகல இரயில் பாதை, கன்னியாகுமரி - நாகர்கோவில் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், நாகர்கோவில் - இரணியல் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், தூத்துக்குடி - மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரயில் பாதை (கட்டம்I), சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை, மயிலாடுதுறை – திருவாரூர் அகல இரயில் பாதை, பட்டுக்கோட்டை நான்கு முனை சந்திப்பு, புதிய அகல இரயில் பாதை (சேலம் - கரூர் வழித்தடம் உருவாக்குதல்),

மன்னார்குடி - நீடாமங்கலம் அகல இரயில் பாதை, சென்னை கடற்கரை - கொருக்குப்பேட்டை மூன்றாவது, நான்காவது வழித்தடம் மற்றும் விழுப்புரம் - திண்டுக்கல் அகல இரயில் பாதை ஆகிய திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன என்றும், மேலும், மீதமுள்ள திட்டங்களுக்கான நிலம் கையகப் படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### நிதியை விடுவிக்காமல் தாமதப்படுத்துவதா?

நில எடுப்புப் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு நில உரிமையாளர்களுக்கு உரிய நேரத்தில் இழப்பீடு வழங்குவது மிக முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், துரதிர்ஷ்டவசமாக, இரயில்வே அமைச்சகத்தால் நிதியை விடுவிப்பதில் ஏற்படும் தாமதங்கள், தனிப்பட்ட திட்டங்களுக்குப் பெரும்பாலும் நிதியினை முழுமையாக வழங்காமல் பிரித்து வழங்குவது என்பது, தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தினைத் தடுத்து, தாமதங்களுக்கு வழிவகுத்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு நீடித்த நிச்சயமற்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்